## தலைப்பு - 151 கடற்றொழில் அமைச்சு

---------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடற்றொழில் அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் கடற்றொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 யூன் 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடற்றொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்றும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| 2020 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 154(6) அறிக்கைக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.6.2 (இ) | நிதி அல்லாத சொத்துக்களுடன் தொடர்புடைய ACA - 6 கூற்றினை பரிசோதிக்கையில் 2020 ஆம் ஆண்டிற்கான சொத்துக் கொள்வனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 81,787,561 எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிதிச் செயலாற்றில் கூற்றில் மூலதனச் சொத்துக்களின் கையேற்பு ரூபா 81,982,353 எனக் காண்பிக்கப்பட்டிருந்த மையால் ரூபா 194,792 வேறுபாடு காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் திருத்தமாகத் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| 1.6.4 | 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,625,268 ஆன வைப்புக்கள் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | பரிசேதனை மேற் கொண்ட பின்னர் காலம் கடந்த வைப்புக்கள் அர சாங்க வருமான த்திற்கு செலவு வைக்கப்படுதல் வேண்டும். |

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கடற்றொழில் அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கிலுள்ள 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட மீதி ரூபா 1,227,112 ஆகும். அதிலுள்ள ரூபா 555,553 பிடித்துவைக்கப்பட்ட இரண்டு ஒப்பந்த வைப்புக்களானது இறுதிப் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமையாலும் ரூபா 671,559 தொகை ஒப்பந்தத்திலுள்ள குறைபாடுகள் பூரணப்படுத்தப்படாமை காரணமாகவும் பிடித்து வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த | 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 1,227,112 வைப்பு மீதி தொடர்பில் விசேட கவனம் செலுத்தி துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும். | பரிசோதனை மேற் கொண்டு காலங் கடந்த வைப்புக் களை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைத்தல் வேண்டும். |

மீதிகளை தீர்ப்பனவு செய்து நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை

### 1.6.2 **ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதி சாராதா சொத்துக்கள் கூற்றுக்காக (ACA-6) சமர்ப்பிக்கப்பட்டிருந்த SA – 82 திறைசேரி கணனிக் குறிப்பிதழின் படி நிலையான சொத்துக்களின் கொள்வனவுப் பெறுமதி ரூபா 71,020,869 ஆன போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றில் மூலதனச் சொத்துக்களின் கையேற்பின் கீழ் ரூபா 46,523,499 காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 24,497,370 வேறுபாடு காணப்பட்டது. | 2020.01.01 முதல் 2020.08.31 வரையான காலத்தில் கடற்றொழில் திணைக்களம் விவசாய அமைச்சின் கீழ் காணப்பட்டமையாலும் அந்தக் காலத்தில் கொள்வனவு செய்யப்பட் டிருந்த ரூபா 24,497,372 சொத்துக்கள் அமைச்சிற்கு கையளிக்கப்படாமை யாலும் நாளேட்டுப் பதிவு மூலம் 2021 ஆம் ஆண்டில் கடற்றொழில் அமைச்சிற்கு கையேற்கப்பட வேண்டியுள்ளது. | நிதிக்கூற்றுக் களை திருத்த மாக தயாரித் தல் வேண்டும். |

### **1.6.3 கட்டுநிதி மீதி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு முதல் காணப்பட்டு வருகின்ற ரூபா 6,400,000 தொகையான கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி 2021 சனவரி 01 இல் உள்ளவாறான அமைச்சின் கட்டுநிதிக் கணக்குகளில் காண்பிக்கப்படாதிருந்ததுடன், 2021 பெப்ரவரி மாதம் இலங்கை சுங்கத்தால் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 1,083,663 தொகையில் அந்தி நிலுவைக் கட்டுநிதியின் ஒரு பகுதி மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தது. நிலுவை மீதியாக ரூபா 5,316,337 தொகை திறைசேரி கணனி அச்சுப் பிரதியான SA 70 அறிக்கையில் காட்டப்பட்டிருந்தது. இந்த தீர்க்கப்படாத கட்டுநிதியை தீர்ப்பதற்காக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திட மிருந்து ரூபா 50,000 வீதம் 2021 ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் அறவிடப்பட்டிருந்த ரூபா 150,000 தொகை திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாறு நிதி நிலைமைக் கூற்றிலும் ACA 4 கூற்றிலும் தீர்க்கப்படாத கட்டுநிதி மீதிகள் (7002-0-0-089-18) வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது 2010 முதல் காணப்பட்டு வருகின்ற கட்டுநிதி மீதியாவ துடன், அமைச்சின் கணக்குப் புத்தகங்களின் படி முன்னெடுத்து வரப்படாதிருப்பதுடன் திறைசேரிப் புத்தகங்களின் ஊடாக தீர்த்தல் கள் இடம்பெறுகின்றமையால் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தா பனம் அவ்வப்போது வழங்குகின்ற பணத் தொகைகள் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டு இந்த நிலுவை மீதி தீர்க்கப்படுகின்றது. | திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளுடன் ஒப்பீடு செய்து நிதி நிலைமைக் கூற்றி லும் ACA 4 கூற்றி லும் வெளிப்படுத் துதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) (i) ஏரிகள் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புச் செயற்திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டில் நாயாறு, நந்திக்கடல், அருகம்பை, லங்கா பட்டுன, முந்தல் மற்றும் ரெகவ ஆகிய கடலேரிகளை ஆழப்படுத்தி சுத்திகரிப்பதற்காக ரூபா 353.37 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் 5.9 வீதத்திற்குச் சமமான ரூபா 23.49 மில்லியன் மாத்திரமே ஆண்டின் இறுதிவரையிலும் செலவிடப்பட்டிருந்தது. | இதற்கான ஆரம்ப திட்டமிடல் நடவடிக்கைகள் தாமதமடை ந்தமை காரணமாக கொள்வ னவுகள் தாமதமடைந்த துடன், ஆகையால் எதிர்பா ர்த்த செலவினத்தை செய்ய முடியாது போயிருந்தது. | ஆரம்ப திட்டமி டல் நடவடிக் கைகள் மற்றும் கொள்வனவுகள் தாமதமின்றி மேற்கொள்ளப்ப டுதல் வேண்டும். |
| (ii) பலபிடிய மீன்பிடி துறைமுகத்தின் நிர்மாண செயற்திட்டத்திற்கான செலவினம் ரூபா 1,030,216 ஆனதுடன், ஆரம்ப நிதி ஏற்பாட்டுடன் ஒப்பிடுகையில் 0.34 சதவீத செயல் முன்னேற்றம் மாத்திரமே அடையப்பட்டிருந்தது. அதற்கமைய, எதிர்பார்க்கப்பட்ட பணிகள் நிறைவேற்றப்படாதிருந்தமையால் பௌதீக செயல் முன்னேற்றமும் பின்னடைவு கண்டிருந்தது. | உலகளாவிய தொற்று நோயான கொவிட் 19 இந்தப் பணிகளின் மீது தாக்கம் செலுத்தியிருந்ததுடன் அதனால் செயல் முன்னேற்ற மும் பின்னடைவு கண்டிருந் தது. | எதிர்பார்க்கப்ப ட்ட பணிகள் தாமதமின்றி நிறைவேற்றப்பட வேண்டும். |
| (iii) நீர்கொழும்பு கடலேரியை அபிவிருத்தி செய்வதன் கீழ் புதிய இறங்குதுறை ஒன்றை நிர்மாணப்பிதற்காக ரூபா 145 மில்லியன் நிதி ஏற்பாடு செய்து கொள்ளப்பட்டிருந்த போதிலும், நிதிப்பிரமாணம் 66 மாற்றல்களின் படி ரூபா 71,500,000 தொகை ஏனைய செயற்திட்டங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது. அதன்படி, தேறிய செயற்திட்ட நிதி ஏற்பாடு ரூபா 73,500,000 ஆனதுடன் அதில் செயற்திட்டத்திற்கான செலவினம் ரூபா 11,095,602 எனக் காட்டப்பட்டிருந்தது. மேலும், அமைச்சினால் பேணப்பட்டிருந்த வாக்குப்பண பேரேட்டின் படி அந்தச் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த எந்தவொரு தொகையும் குறித்த விபரம் காணப்படாததுடன், செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டி ருந்த செயல் முன்னேற்ற அறிக்கையிலும் பௌதீக செயன்முன்னேற்றம் பூச்சியம் என்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கு காரணமாக இணக்கப்பாடு வழங்கப்படாததுடன் சட்ட ரீதியான சிக்கல் ஏற்பட மாட்டாது என்பதாக 2021.09.06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் சட்டமா அதிபர் கருத்துத் தெரிவித்த பின்னர் ஒருங்கிணைந்த களப் பரிசோதனை மேற் கொண்டு தமது ஒப்புதலை வழங்குவதாக அறிவிக்கப்ப ட்டு 2021.11.03 ஆந் திகதி அந்தக் களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போதி லும் அந்தத் திணைக்கள த்தின் ஒப்புதல் இதுவரை வழங்கப்படாமையாலும் இந்த எதிர்பாராத நிலைமை காரணமாகவும் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆரம்ப திட்டமி டல் நடவடிக் கைகள் மற்றும் கொள்வனவுகள் தாமதமின்றி மேற்கொள்ளப்ப டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 03 செலவின விடயங்களிற்காக நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்த ரூபா 169,500,000 நிதி ஏற்பாட்டிலிருந்து ஆண்டின் போது ரூபா 20,652,381 மாத்திரமே செலவிடப்பட்டிருந்த மையால் ரூபா 148,847,619 சேமிப்பு ஏற்பட்டிருந்ததுடன், நிதிப்பிரமாணத்தின் மாற்றல்களின் கீழான நிதி ஏற்பாட்டுடன் ஒப்பிடுகையில் சேமிப்பானது 88 சதவீதமாகக் காணப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | முன்னைய ஆண்டுகள் முதல் களமெடிய மீன்பிடித் துறைமுக நிர்மாணச் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக ஆரம்ப செலவின மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்காக ஆரம்ப பட்டத்தில் திட்டமிடப்பட்டிருந்த அனைத் துப் பணிகளும் அதற்குரிய அங்கீகரிக்கப்பட்ட செலவின எல்லைக்குள் செய்து முடிக் கப்பட்டதுடன் மேலதிகமாக மேற்கொள்ளப்பட வேண்டு மென கௌரவ அமைச்சரா லும் கௌரவ இராஜாங்க அமைச்சராலும் அமைச்சுச் செயலாளர் உள்ளிட்ட குழுவினாலும் 2021.01.15 ஆந் திகதி மேற்கொள்ள ப்பட்ட களப் பரிசோதனை யின் போது மீனவர்களின் கோரிக்கையின் படி இனங்காணப்பட்டன. | செலவின மதிப் பீடு தர்க்க ரீதியான முறை யில் மேற்கொள் ளப்பட வேண் டும். |
| (ii) | ஆரம்பகட்ட விசாரணைகள் மற்றும் சாத்தியக்கூறு ஆய்வு செலவின விடயத்தின் கீழ் ரூபா 8,177,173 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய கொடுப்பனவு உறுதிச் சிட்டைகள், செலுத்திய தொகைகள் போன்ற விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அதற்குரிய கொடுப்பனவு உறுதிச்சிட்டைகள், செலுத் திய தொகைகள் போன்ற விபரங்கள் கோரப்பட்டால் அவற்றை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க முடியும். | நிதிப்பிரமாணத்தி ன் படி கொடுப்ப னவு உறுதிச்சிட் டைகள், செலுத் திய தொகைகள் போன்ற விபரங் கள் கணக்காய் விற்குச் சமர்ப்பி க்கப்பட வேண் டும். |
| (iii) | மேற்படி செலவின விடயத்தின் கீழான ரூபா 8,322,827 சேமிப்பிலுள்ள ரூபா 6,500,000 சேமிப்பானது முழுமையாக நிதிப்பிரமாணத்தின் மூலம் மேற்கொள்ள ப்பட்ட மாற்றல்களிலிருந்து ஏற்பட்ட தாகும். | பதிலளிக்கப்பட்டிருக்கவி ல்லை. | செலவின மதிப் பீடு தர்க்க ரீதியான முறை யில் மேற்கொள் ளப்பட வேண் டும். |
| (இ) | ரூபா 4,177,250,000 மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டுத் தொகையிலிருந்து 24.3 சதவீதத்திற்குச் சமமான ரூபா 1,019,145,349 சேமிக்கப்பட்டிருந்ததுடன், அதில் 11 செலவின விடயங்களிற்குரிய நிதி ஏற்பாட்டில் 53 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையிலான வீச்சிலான ரூபா | இணங்குகின்றோம் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | 239,264,700 சேமிப்பும் இரண்டு செலவின விடயங்களிற்குரிய நிதி ஏற்பாட்டில் 100 சதவீத சேமிப்பும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | |
| **(ஈ)** | கடற்றொழில் அமைச்சினால் 2021 ஆம் ஆண்டின் அபிவிருத்திச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நாரா நிறுவனத்திற்கு ரூபா 20,278,000 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 12,042,841 செலவிடப்பட்டிருந்தது. யூலை மாத்தில் வழங்கப்பட்டிருந்த ரூபா 15,378,000 தொகை 5 மாதங்கள் கடந்த பின்னரும் முழுமையாக பயன்படுத்தப் படாதிருந்ததுடன், செலவிடப்பட்ட தொகைகளிற்குரிய விபரங்கள் சமர்ப்பி க்கப்படதிருக்கையில் மீண்டும் ரூபா 4,900,000 தொகை நாரா நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட் நோய்த் தொற்று காரணமாக அரச நிறுவனங்களில் நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொ ள்ள முடியாதிருந்தமையால் அந்தச் செயற்திட்ட செயற்பாடுகளை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்த முடியாது போயிருந்ததாக அந்த நிறுவனங்களால் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட செயற்பாடுகளை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதிய 07/2020 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் படி நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 இன் கீழ் மீண்டுவரும் செலவின விடயங்களிற்குரிய நிதி ஏற்பாடுகளை அவற்றுக்கிடையே மாற்றீடு செய்கையில் அமைச்சுச் செயலாளரால் மேற்கொள்ளப்பட்ட அவ்வாறான மாற்றீடுகள் தொடர்பான விரிவானதோர் அறிக்கையினை நிதி ஆண்டின் திசெம்பர் 31 இற்கு முன்பதாக தேசிய பாதீட்டு திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும் செயலாளரால் 08 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட அவ்வாறான மாற்றீடுகள் தொடர்பான விரிவானதோர் அறிக்கை கடற்றொழில் அமைச்சினால் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | மீண்டுவரும் செலவின மாற்றீடுகள் தொடர்பான விபரங்கள் அந்த மாற்றீடுகள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | நிதிப்பிரமாணம் 12(1) பந்தியின் படி மூலதனச் செலவுகளை மதிப்பீடு செய்கையில் மூலதனச் சொத்துக்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்தலுக்கான தேவைப்பாடுகள் முழுமையாக விபரிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும் 2021 மற்றும் 2001 ஆம் இலக்க மூலதனச் செலவின விடயங்களின் கீழ் மூலதனச் சொத்துக்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்தலுக்கான மதிப்பீடுகள் | மேலதிகமாக 03 மாடிகளை நிர்மாணித்தல், சுத்திகரிப்பு முறைமையை மேம்படுத்தல், ஆவணப்படுத்தல் அறை மற்றும் வாகனம் நிறுத்துமிட வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்தல், அமைச்சின் கட்டிடத்தை திருத்துதல், வர்ணம் தீட்டுதல், பூங்கா அலங்காரம் உள்ளிட்ட | செலவின மதிப்பீடுகள் தர்க்கரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படாதிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டில் அமைச்சின் பிரதான நுழைவாயிலை திருத்துவதற்காக ரூபா 15,300,601 தொகை ஒப்பந்த காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. | நான்கு நட்டங்களைக் கொண்ட இந்த கொள்வனவு நடவடிக்கைக்காக அமைச் சரவை தீர்மானத்தின் படி மூலதனச் சொத்துக்களை கையேற்றல் செலவின விடயத்தின் கீழ் நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிரு ந்தன. அதற்கமைய அச் செலவினம் அந்த செலவின விடயத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது. | |
| **(எ)** | ஹிக்கடுவ மீனவர் வீட்டுத் தொகுதியை புனரமைப்பதற்காக கடற்றொழில் அமைச்சினால் ரூபா 39.012 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தமை தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| **(i)** | இந்த வீடமைப்புத் தொகுதியை புனரமைத்தலானது கடற்றொழில் அமைச்சின் 2021 இற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருக்கவில்லை. | சனாதிபதி அவர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற ''கமசமக பிளிசந்தர'' நிகழ்ச்சித்திட்டத்தின் போது துரிதமாக நிறைவேற்றப்பட வேண்டிய பணியாக இனங் காணப்பட்டிருந்த ஹிக்கடுவ மீனவர் வீட்டுத் தொகுதியை புனரமைப்பதற்காக இந்த நிதி ஏற்பாடு கிராமிய வீடமைப்பு, நிர்மாணங்கள் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சிற்கு வழங்கப்பட்டு இதனை முன்னுரிமைப் பணியாகக் கருதி நிறைவேற்ற வேண்டிய தேவையை கருத்திற் கொண்டு இவ்வாறு செய்யப் பட்டது. | -மேற்படி- |
| **(ii)** | ஹிக்கடுவ மீனவர் வீட்டுத் தொகுதி கடற்றொழில் அமைச்சுக்குரிய சொத் தொன்றாகும் என தேசிய பாதீட்டுத் திணைக்களத்தால் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது கடற்றொழில் அமைச்சுக்குரிய சொத்தொன்றா அல்லது இல்லையா என்பது குறித்து கருத்திலெடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், ஏரிகள் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு நிதி ஏற்பாட்டிலிருந்து அந்தச் செலவினம் செய்யப்பட்டிருந்தமையால் ஏரிகள் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு என்ற குறிக்கோள் அடையப்பட்டிருக்கவி ல்லை. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2021 திசெம்பர் 23 ஆந் திகதியில் உள்ளவாறு கிராமிய வீடமைப்பு, நிர்மாணங்கள் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிதிசார் மற்றும் பௌதீக செயல் முன்னேற்ற விபரங்களின் படி இந்தச் செயற் திட்டத்தின் நிதிசார் செயல் முன்னேற்றம் 14 சதவீதத்திற்குச் சமமான ரூபா 5.5 மில்லியன் எனவும் பௌதீக செயல் முன்னேற்றம் 20 சதவீதம் எனவும் 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் வேலை களை பூரணப்படுத்துவதற்கு திட்டமிடப் பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | இது குறித்து அந்த அமைச்சிடமிருந்து விபரங்கள் கோரப்பட்டுள்ளதுடன் அதற்கு பதில் கிடைத்தவுடன் அது சமர்ப்பிக்கப்படும். | நிதிசார் செயல் முன்னேற்றம் 14 நிதிசார் செயல் முன்னேற்றமும் பௌதீக செயல் முன்னேற்றமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களிலுள்ள (iii) ஆவது குறிப்பின் படி பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் மொத்தப் பெறுமதி ரூபா 226,496,035 ஆன போதிலும், நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த திறைசேரி கணனி அச்சுப் பிரதியான SA-92 இன் படி பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் மொத்தப் பெறுமதி ரூபா 227,727,740 ஆனமையால் ரூபா 1,231,705 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் வெளிப்படுத் தப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்று க்களின் படி பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் மொத்தப் பெறுமதி ரூபா 223,584,930 ஆகும். | பொறுப்புக்கள் கூற்றி லுள்ள மீதிகள் சரியாக சமர்ப்பிக்கப் பட வேண்டுமென்ப துடன், நிதி ஏற்பாட்டி ற்கு அமைவாக மாத்திரம் பொறுப்புக் கள் ஏற்படுத்திக் கொள்ளப்படுதல் வேண்டும். |

**2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்கா ய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த | உள்ளகக் கட்டுப்பாட்டின் சுயாதீன த்தை பாதுகாப்பதற்காக நி.பி. 135 இன் கீழுள்ள அதிகாரப்பகிர்வுகள் மேற்கொள்ளப்பட்டு உத்தியோகத்தர் களிடையே உரியவாறு வேலைகள் ஒப்படைக்கப்பட்டு அமைச்சின் பணி | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் |

| | | |
|---|---|---|
| வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள் வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன், அம்மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டத ற்கான அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கள் கணக்காய்வு மற்றும் முகாமைத் துவக் குழுவால் கட்டுப்படுத்தப்ப டுவதுடன் அது தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அந்தக் குழுவின் ஊடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப் பட்டு ஆண்டின் தொடக்கத்தில் வருடாந்த மதிப்பீடு, வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம், கொள்வனவுத் திட்டம், கணக்காய்வுத் திட்டம், நிதி அதிகாரப் பகிர்வு என்பவற்றின் பிரதிகள் கணக்காய் வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டு காலாண்டு ரீதியாக செயல் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டமும் நடாத்தப்பட்டு திறைசேரியின் பணிப் பின் பேரில் வருடாந்தக் கணக்குகள் தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | பிரகாரம் நடவடி க்கை எடுக்கப்ப டல் வேண்டும். |

## 2.4 வங்கிக் கணக்குகளை பேணிச்செல்லல்

வங்கிக் கணக்குகளை பேணிச்செல்லல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கடற்றொழில் அமைச்சினால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்பு (viii) இன் படி வட மாகாண நிலைபேறான கடற்றொழில் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் வங்கிக் கணக்கு இலக்கம் 7040777 இன் கீழ் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசு மீதியும் அத்திகதியில் உள்ளவாறான வங்கிக் கூற்றின் படியான மீதியும் ரூபா 48,700 ஆகக் காணப்பட்டது. இது தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன. | | |
| (அ) கடற்றொழில் அமைச்சினால் மீன்பிடி துறைமுகங்கள், நங்கூரமிடும் தளங்கள் மற்றும் தரையிறங்கும் இடங்களை அபிவிருத்தி செய்தலும் புனரமைத்தலும் செயற்திட்டத்திற்காக பேணப்பட்டிருந்த வங்கிக் கணக்கிற்கு 2021 பெப்ரவரி மாதத்தில் ரூபா 391,655,000 தொகை மாற்றப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 395(இ) பிரகாரம் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 2021 மார்ச் மாதம் முதல் 2021 நவம்பர் | இக்காலத்தில் வங்கிக் கணக்கு செயற்படாமை யால் வங்கிக் கணக்கிண க்கக் கூற்று தயாரிக்கப்பட தயாரிக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத் தின் பிரகாரம் வங்கிக் கணக்கி ணக்கக் கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரையான காலத்திற்குரிய இச்செயற்திட்டத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) இராஜாங்க அமைச்சினால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய ரூபா 2,908,690 தொகை அவ்வாறு அனுப்பிவைக்கப்படாது செயற்திட்ட வங்கிக் கணக்கிற்கு அதற்காக மூன்று காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன. | செயற்திட்ட முகாமைத்துவ பிரிவில் பேணிவரப்பட்டிந்திருந்த Develop & Rehabilitation of Fishery Harbours Anchorages & Landing sites Project இன் செலவுகளை மேற்கொள்வதற்காக 2020.12.31 இல் போதியளவு கட்டுநிதி கிடைக்காமையால் 2020.12.31 இல் உள்ளவாறு காணப்பட்ட சிட்டைகளின் பெறுமதி ரூபா 385,182,274.82 ஆகும். 2020.12.31 இல் உள்ளவாறு இராஜாங்க அமைச்சினால் ரூபா 2,908,690 தொகை மூன்று தவணைகளில் கட்டுநிதியாக வழங்கப்பட்டதுடன் அந்த கட்டுநிதித் தொகை காசுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டு 2020.12.31 இல் காசுப் புத்தகம் மூடப்பட்டது. | எஞ்சிய தொகைகள் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) கடற்றொழில் அமைச்சின் 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டின் மூலம் பிரதான 9 முன்னிரிமைப் பணிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதற்கமைய தயாரிக்கப்பட்டிருந்த செயல் முன்னேற்ற அறிக்கையின் படி மீனவச் சமூகத்தின் நலனோம்பல் நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல், மீன்பிடித் துறைமுகங்களை நவீனப்படுத்துதல் மற்றும் தேவைக்கேற்ப மீன்பிடி துறைமுகங்களை நிர்மாணித்தல் ஆகிய பணிகள் தவிர்ந்த பின்வரும் ஏனைய பணிகளைக் கருத்திற்கொண்டு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், | | |

| | | |
|---|---|---|
| வடக்கு மற்றும் கிழக்கு கடற் பிராந்தியங்களில் அத்துமீறி மீன்பிடித்தலில் ஈடுபடுதலை ஒழித்தல், கடல்சார் மற்றும் கடலோர பாதுகாப்பு பிரிவை வலுப்படுத்துதல் மற்றும் இந்தியாவுடனான பிணக்கை தவிர்த்தல் ஆகிய பணிகளுக்காக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஒருங்கிணைந்த குழுவொன்றை நியமித்து சில தீர்மானங்களை மாத்திரம் அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | |
| (i) கரையோர பிரதேசங்களில் மீன்களின் பெருக்கத்தை அதிகரிப்பதற்காக விஞ்ஞானரீதியான முறையொன்றை அறிமுகப்படுத்துதல். | மீன்களின் பெருக்கத்தை அதிகரிப்பதற்காக கடற்றொழில் திணைக்களத்தின் கீழ் கடலோர வலய அபிவிருத்தியின் இரண்டாம் கட்டமாக மாத்தறை நில்வெல்ல பிரதேசத்தில் இலங்கை கடற்படையுடன் இணைந்து செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி மூன்றாம் கட்டத்தின் கீழ் யாழ்ப்பாணக் கடலில் 38 அகற்றப்பட்ட பேரூந்துகள் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. | முன்னுரிமைப் பணிகள் மீது கவனம் செலுத்தி திட்டங்களை வகுத்து அவற்றை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) சர்வதேச கடற் பரப்பில் மீன் பிடிப்பதை விரிவுபடுத்துவதற்காக உள்நாட்டுக் கம்பனிகளுக்கு சந்தர்ப்பம் வழங்குதல் | கடற்றொழில் திணைக்களத்தினால் நவீன தொழில்நுட்பம் மற்றும் நவீன வழிமுறைகளுடன் கூடிய சகல வசதிகளையும் கொண்ட படகுகளை அறிமுகப்படுத்துவதற்காக நிபுணர்களை உள்ளடக்கிய குழுவொன்றின் மூலம் செயற்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும், அதற்காக ஒப்புதல் கிடைத்திருக்கவில்லை. | -மேற்படி- |
| (iii) தகரத்தில் அடைத்த மீன் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக தனியார் கம்பனிகள் மற்றும் முதலீடுகளை ஊக்கப்படுத்துதல். | 2021 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |
| (iv) உற்பததியாளருக்கும் பாவனையாளர்களிற்கும் நியாயமான விதத்தில் மீன் உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல் அபிவிருத்தி நடவடிக்கைகளை | கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் இதற்காக முறையான திட்டம் வகுத்து சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | விரிவுபடுத்துதல். | தேசிய திட்டமிடல் திணைக் களத்தின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | |
| (v) | வடக்கு மற்றும் கிழக்கு கடற் பிராந்தியங்களில் அத்துமீறி மீன்பிடித் தலில் ஈடுபடுதலை ஒழித்தல், கடல்சார் மற்றும் கடலோர பாதுகாப்பு பிரிவை வலுப்படுத்துதல் மற்றும் இந்தியா வுடனான பிணக்கை தவிர்த்தல். | வடக்கு மற்றும் கிழக்கு கடற் பிராந்தியங்களில் அத்துமீறி மீன்பிடித் தலில் ஈடுபடுதலை ஒழிப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையா டுவதற்காக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஒருங்கிணைந்த குழுவொன்று (Joint Working Group) ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (vi) | மீனவச் சமூகத்திற்காக பயனுள்ள வங்கி மற்றும் காப்புறுதி முறையொன்றை அறிமுகம் செ ய்தல். | 2021 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |
| (vii) | சமுத்திர பல்கலைக்கழகத்தை பயன்ப டுத்தி இளைஞர்களிற்காக கடற்றொழில் தொடர்பான நவீன மற்றும் முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்ட ங்களை நடைமுறைப்படுத்துதல். | 2021 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் இந்த செயற்திட்டத் திற்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்காமையால் இந்த செயற்திட்டம் நடைமு றைப்படுத்தப்படவில்லை. | -மேற்படி- |
| **(ஆ)** | அபிவிருத்தி உதவிகளின் கீழ் மூலதன மாற்றல்கள் செலவின விடயத்திற்காக தேசிய நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை 110 மடி கணனிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 8,514,000 செலவிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2021 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அவ்வாறான கொள்வனவுக்கு நிதி ஏற்பாடு காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | தேசிய நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை யால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த புதிய செயற்திட்ட அறிக்கை யின் படி இந்த செயற் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 7 மில்லியன் ஆகும். அந்தத் தொகை குறைவடைந்துள்ள மீன் இனங்களை விருத்தி செய்தல் மற்றும் தற்போது பிடிக்கப்படாதுள்ள மீன் இனங்கள் தொடர்பில் ஆய்வினை மேற்கொள்வத ற்குத் தேவையான தரவு களை சேகரிக்கும் பணியை முறைப்படுத்துவதற்காக தேசிய நீரியல் வளர்ப்பு செயற்திட்ட உத்தியோகத்தர் களிற்கு 110 மடி கணனிகளை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்து வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. | செயல் நடவடிக் கைத் திட்டத்தி ற்கு அமைய உத்தேச செயற் திட்ட பணிகளிற் காக நிதி ஏற்பா டுகளை பயன்ப டுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மூலதன மாற்றல்களின் கீழ் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் என்ற செலவின விடயத்திற்காக நாரா நிறுவனத்தினால் ரூபா 10,130,187 செலவிடப்பட்டிருந்த போதிலும், செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் மீன் பிடிப்பதற்காக செலவிடப்படுகின்ற பிரயாணக் காலத்தை குறைப்பதற்கும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த தொழில்நுட்பம் தொடர்பான எந்தவொரு விபரமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நாரா நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை மாத்தறை, காலி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் மீன்கள் ஒன்றுகூடும் இடங்களிலுள்ள கடற்பரப்பில் கூடுகளை வைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அது திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 3.2 பணிகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 10,000,000 நிதி ஏற்பாட்டிலிருந்து மீன்கள் உள்ள இடங்களை கண்டுபிடிப்பதற்கான மென்பொருள் ஒன்று மாத்திரம் ரூபா 6,500,000 செலவில் உருவாக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் அமைச்சில் திட்டமிடப்பட்டிருந்த கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினாலும் நாரா நிறுவனத்தினாலும் நடைமுறைப்படுத்த வேண்டியிருந்த 10 கரையோர மீன்பிடி இடங்களிற்கான FAD பொருத்துதல், சூழல் தோழமையுள்ள குறைந்த எரிபொருளுடனும், மாற்றுவழி எரிசக்தியுடனும் கூடிய மீன்பிடி படகுகளை அறிமுகப்படுத்துதல், குறைவடைந்துள்ள மீன் இனங்களை அதிகரிப்பதற்காக மீன் குஞ்சுகளை வைப்பதற்கு ஏற்ற மீன் இனங்களையும் அதன் அளவையும் இனங்காண்பதற்கு ஆராய்ச்சிகளை நடாத்துதல், கடற்கரையை அண்மித்த கடற்பரப்பில் மீன் இனவிருத்திக்காக பழைய வாகனங்களைப் பயன்படுத்தி கூடுகளை மூழ்கச் செய்தல் ஆகிய செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2021 இன் புதிய தொழில்நுட்ப செலவின விடயத்தின் கீழ் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத் திற்கும் தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத் திற்கும் ரூபா 60 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந் ததுடன், அதில் பயன்படுத்தப் பட்டிருந்த நிதி ஏற்பாடு ரூபா 39.2 மில்லியனாகும். | செயல் நடவடிக் கைத் திட்டத்தி ற்கு அமைய உத்தேச செயற் திட்ட பணிகளிற் காக நிதி ஏற்பா டுகளை பயன்ப டுத்த வேண்டும். |

## 3.3 பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் (உ) உபபிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவையான நிச்சயிக்கப்பட்ட காலத்தினுள் அனைத்துக் கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கப்பட வேண்டிய போதிலும், 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட 6 கணக்காய்வு ஐயவினாக் களிற்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | 6 கணக்காய்வு ஐய வினாக்கள் எஞ்சியிருப் பதுடன் குறித்த பிரிவு களிலிருந்து பதில் கிடைத்தவுடன் அவை சமர்ப்பிக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடி க்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 10 கடலேரிகளையும் 100 குள்களையும் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டதிற்காக 2018 ஆம் ஆண்டில் அமைச்சுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,000 மில்லியன் தொகையிலிருந்து 03 படகுகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 180 மில்லியன் தொகை தேசிய நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆகக்குறைந்த விலையினைச் சமர்ப்பித்திருந்த மனுதாரரின் கூறுவிலையை எவ்வித நியாயமான காரணமும் இன்றி நிராகரித்து வேரொறு விலைமனுதாரருக்கு கேள்வி கையளிக்கப் பட்டிருந்த போதிலும் குறித்த இயந்திரம் கிடைத்திருக்காமையால் அமைச்சினால் இலக்கிடப்பட்டிருந்த பின்வரும் பணிகளை 04 ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட அடைய முடிந்திருக்கவில்லை. | இந்த உபகரணங்களை கொள்வனவு செய்தலுடன் தொடர்புடைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக் கையில் இந்த உற்பத்திப் பொருளை பரிந்துரைப்பத ற்கான காரணங்கள் தெளி வாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | 2006 இன் அரசா ங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் படி செயற்படுதல் வேண்டும். |
| (அ) 03 படகுகளின் கொள்வனவுக்காக வழங்குனரால் போலியான முற்பண பிணைமுறி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறு மோசடியான விதத்தில் அரசாங்க நிதியை துஷ்பிரயோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந் தமை தொடர்பில் குறித்த உத்தியோகத்தர்களிற்கு எதிராககவும் வழங்குனருக்கு எதிராகவும் நடவடிக்கை அல்லது சட்டரீதியான நடவடிக்கை | இதன் மூலம் அரசாங்க த்திற்கு ஏற்பட்ட சகல இழப்புக்களையும் அறவிடுவ தற்கு நடவடிக்கை எடுக்கப்ப ட்டதுடன், சட்டமா அதிபரின் ஆலோசனையின் படி வழங்குனரால் சமர்ப்பிக்கப் பட்ட போலியான வங்கிப் பிணைமுறிக்கு அமைய உடன்படிக்கை இரத்தாகியி | குறித்த உத்தியோ கத்தர்களிற்கு எதிராகவும் வழங் குனருக்கு எதிராக வும் நடவடிக்கை அல்லது சட்டரீதி யான நடவடிக்கை எடுக்கப்பட வேண் டும். நிதிப்பிரமா ணம் 705 இன் படி |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிராததுடன் நிதிப்பிரமாணம் 705 இன் படி வழங்குனரை கறுப்புப் பட்டியலில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவுமில்லை. | ருந்தமையாலும் உரிய உடன்படிக்கைக் காலத்தினுள் வழங்குனரால் பொருட்கள் வழங்கப்படாமையாலும் இரு தரப்புக்கும் இடையில் கைச்சாதிடப்பட்ட உடன்படிக்கை முடிவிற்கு கொண்டுவர ப்பட்டிருந்தது. | வழங்குனரை கறுப்புப் பட்டியலில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக் கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 யூலை 03 ஆந் திகதிய 152/2018 ஆம் இலக்க முற்பணக் கொடுப்பனவுச் சான்றிதழின் சரியான தன்மையை முற்பணத்தை செலுத்துவதற்கு முன்னர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், 06 தாமதிக்கப்பட்டிருந்தமையால் போலியான சான்றிதழ் என்பதனை உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை. | முற்பணச் சான்றிதழ் போலியானது எனத் தெரியவந்தவுடன் அதிகாரசபையால் அது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு முற்பணப் பிணைமுறிக்குரிய பணம் மாத்திரமன்றி செயலா ற்றல் பிணைமுறிக்குரிய பணமும் அதிகாரசபையால் அறவிடப்பட்டது. | முற்பணத்தை செலுத்துவதற்கு முன்னர் முற்பணக் கொடுப்பனவுச் சான்றிதழின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண் டும். |
| (இ) | அமைச்சுச் செயலாளரின் அறிவுறுத்தல்கள், கொள்வனவு வழிகாட்டல் ஆலோசனைகள் மற்றும் நிதிப்பிரமாணங்களிலும் சட்டமா அதிபராலும் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் படி குறித்த உடன்படிக்கை தயாரிக்கப்பட்டிரு க்காமையால் குறித்த வழங்குனருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியாது போயிருந்தது. | பொருட்களின் வழங்குதல் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையாக இருப்பதனால் சட்டமா அதிபரின் ஆலோசனையின் படி குறித்த உடன்படிக்கை முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. | 2006 இன் கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் படி செயற்படுதல் வேண்டும். |
| (ஈ) | அமைச்சு மற்றும் தேசிய நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் உள்ளிட்ட 04 உத்தியோகத்தர்களிற்கு மேற்படி உபகரணத்தின் கட்டமைப்பு திட்டங்கள், பயன்படுத்தப்பட்டுள்ள மூலப்பொருட்கள், உதிரிப் பாகங்கள் மற்றும் என்ஜின் ஆகியவற்றை பரிசோதிப்பதற்கென ஐக்கிய அமெரிக்கா விற்கு சுற்றுப் பிரயாணம் மேற்கொள்வ தற்காக ரூபா 435,499 செலுத்தப்பட்டி ருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள் அடையப்பட்டிருக்கவில்லை. | குறித்த உபகரணத்தின் உற்பத்தி தொடர்பான மேன்முறையீட்டுக் குழுவின் அறிக்கையினை ஆய்வு செய்வதன் மூலம் அதனை உறுதிப்படுத்திக்கொள்ளலாம் | குறித்த உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கேள்விகோரல் ஆவணங்களிலுள்ள பொது நிபந்தனைகள் 1.2 இன் படி உபகரணமானது உரிய தரத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது எனவும் புதிய உற்பத்திப்பொருள் எனவும் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், தெரிவு செய்யப்பட்டிருந்த நிறுவனம் சமர்ப்பித்திருந்த Ultra Tex WH 120 உபகரணமானது மலேசிய நாட்டின் | கேள்விகோரல் ஆவணங்களிலுள்ள பொது நிபந்தனைகளின் படி உபகரணமானது உரிய தரத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது எனவும் புதிய உற்பத்திப்பொருள் எனவும் உற்பத்தியாளரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் மலேசிய உற்பத்தியா | 2006 இன் கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் படி செயற்படுதல் வேண்டும். |

உற்பத்திப் பொருள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், மலேசியாவிலுள்ள அந்த நிறுவனத்தின் இணையதளத்தின் படி அவ்வாறான உபகரணத்தை அந்தி நிறுவனம் உற்பத்தி செய்வதில்லை என்பதும் அது அமெரிக்க தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டு மலேசியாவில் ஒன்றிணைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. அதன்படி கேள்விமனுவிலுள்ள நிபந்தனைகளிற்கு முரணாக இந்த இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு மனுதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அல்லது இல்லையா என்பது கொள்வனவுச் செயன்முறை யின் போது உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் கொள்வனவு மேன்முறையீட்டுக் குழுவின் குறிப்புகள் மற்றும் தொடர்பு டைய பின்னிணைப்புகள் மூலம் உறுதியாகின்றது.